[1986 நவம்பர் 19

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி ஏன் மருந்தகங்கள் அமைக்கவில்லை? கால்நடை மருந்தகங்களை அமைக்க மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்து உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் ஒன்றும் அளிக்கவில்லை. வேளாண்மைக் குழு 1980 ஆம் ஆண்டில் 20 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவரும், அதற்குப் பிற்பாடு 15 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு மருத்துவரும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பணம் இல்லாத காரணத்தால் அது அமல்படுத்தப்படவில்லை.

திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்தல்.

91—(*வினா எண் 9117) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 33/11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

பென்னாகரத்தில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள்

92—(*வினா எண் 9649) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பென்னாகரம் தொகுதியில் எத்தனை இடங்களில் இளம் பட்டுப்புழுவளர்ப்பு மையங்கள் நடைபெற்று வருகின்றன?

(ஆ) நெருப்பூர், ஏரியூர் பெரும்பாளை ஆகிய ஊர்களில் மையங்கள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பென்னாகரம் தொகுதியில் நெருப்பூர், காட்டூர், ஆணைக்கல்லானூர், சின்னப்பட்டி, பிக்கம்